DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 62/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 2 P.W.4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிசாமி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | மாரிமுத்து கவுண்டர் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மானுப்பட்டி செட்டில் வசித்து வருகிறேன். டிரைவர் வேலை செய்து வருகிறேன். கடந்த தேதி சரியாக தெரியவில்லை . 4-5 வருடங்களுக்கு முன் நான் மானுப்பட்டியில் உள்ள என் வீட்டில் வெளியில் நடந்து வந்து கொண்டிருந்த போது மானுப்பட்டி பஸ் ஸ்டாப் அருகில் நின்ற போது மூணாறு ரோட்டில் உடுமலையிலிருந்து வந்த எனக்கு தெரிந்த தோட்டத்தில் குடியிருந்த நபர் இரு சக்கர வாகனத்தில் வந்த போது உடுமலை நோக்கி வந்த மாருதி காரில் வேகமாக வந்து இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. இரு சக்கர வாகனத்தில் வந்தவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. காரை ஓட்டி வந்த வேடசந்துார் ஊரை சேர்ந்தவர் என்று தெரிந்து கொண்டேன் கார் ரோட்டின் ஓரமாக உள்ள பள்ளத்திற்குள் சென்றுவிட்டது. மருத்துவமனைக்கு சென்றவர் இரண்டு மூன்று மணி நேரம் கழித்து இறந்து விட்டதாக தெரிந்து கொண்டேன். இந்த விபத்திற்குகாரணம் காரை வேகமாக ஓட்டி வந்த நபர் தான். நான் உடுமலை அரசு மருத்துமவனைக்கு சென்று போய் பார்த்தேன். போலிசார் என்னை

விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. . உடுமலை –முணாறு ரோடு என்பது தென்வடல் ரோடு என்றால் சரிதான். மானுப்படடி செட் பஸ் ஸ்டேண்ட் என்பது தென்வடல் ரோட்டிற் கிழப்புறமா உள்ளது என்றால் ஆமாம். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் மானுப்பட்டி செட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 100 –150 அடி இருக்கும். இறந்து போன நபர் என்ன உறவு முறை என்றால் உறவு முறை இல்லை அவர்களை எத்தனை வருடம் ஆக தெரியும் என்றால் பழக்க வழக்கமில்லை தோட்டம் வாங்கி குடியிருக்கிறார்கள். காலை 11.00 மணிக்கு மானுப்பட்டி செட்டில் நின்றிருந்தாக சொல்லயுள்ள நிலையில் என்ன விஷயமாக நின்று கொண்டிருந்தீர்கள் என்றால் சாப்பாட்டிற்கு சென்று விட்டு திரும்பி வந்தேன். கோபாலகிருஷ்ணன் தலைகவசம் போடவில்லை என்றால் அதைப் பார்க்கவில்லை. அதற்கு லைசன்ஸ் உள்ளதா என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.
2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் விபத்தில் இறந்த கோபாலகிருஷ்ணன் மூணாறு நோக்கி தெற்கு திசை நோக்கி சென்றார். விபத்ததை ஏற்படுத்திய கார் அவருக்கு பின்னால் வந்தது என்றால் என்றால் எதிரில் வந்தது. போலீஸ் விசாரணையில் பின்னால் வந்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் இல்லை கார் முன்னால் தான் வந்தது. நீங்கள் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும் சொல்லியுள்ள சங்கதிகள் நீதிமன்றத்திலும் சொன்ன சங்கதிகளும் முரணாக சாட்சி அமைத்துள்ளதாலும் ஒரே ஊர்காரர் என்பதாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும் எதிரி அவருடைய சரியான திசையில் வந்தார் என்றாலும் சரியல்ல

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.